தேதி.18.02.2025

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.** 89/2016 திரு.பெருமாள் வா.சா.2

**வா.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வாதி லட்சுமியின் சொந்த சகோதரர் என்றால் சரிதான். வாதியின் மாமியார் ராஜம்மாளின் சொத்து சம்மந்தமாக இந்த வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். வாதி லட்சுமி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார். ராஜம்மாள் என்பவர் உயிருடன் இருக்கும்போது 27.08.1996ம் தேதியில் 4ம் பிரதிவாதிக்கும், 6ம் பிரதிவாதிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் பத்திரம் செல்லாது என்பதற்காக வாதி லட்சுமி பரிகாரம் கேட்கவில்லை என்றால் கேட்டிருக்கிறார். அந்த மாதிரி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த உயிலின் அடிப்படையில் பலவிதமான உரிமை மாற்றங்கள் நடைபெற்றது எனக்கு தெரியுமா என்றால் பின்னாடி தான் தெரியும். எப்போது உரிமை மாற்றம் ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியும் என்றால் 2010ல் தெரியும். வாதி லட்சுமி எந்த ஆண்டில் பிரதிவாதிகளிடம் பாகம் பிரித்துக்கொடுக்க சொல்லி கேட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் 2010ம் ஆண்டிலிருந்தே கேட்டுகொண்டது தெரியும். ஆனால் இந்த வழக்கை வாதி லட்சுமி 2016ம் ஆண்டில் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த உரிமை மாற்றங்கள் செய்த ஆவணங்கள் எல்லாம் செல்லாது என்று வாதி லட்சுமி வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். அதுபோல உயிலுக்கு பின்னால் ஏற்பட்ட ஆவணங்கள்

எதுவும் செல்லாது என்று வாதி லட்சுமி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் போட்டிருக்கிறார். இந்த தாவா வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் வரதம்பாளையம் கிராமம், கொளத்தூரில் சொத்துக்கள் இருக்கிறது. ராஜம்மாள் உயிருடன் இருந்த காலத்திலிருந்தே 4ம் பிரதிவாதி ஜவகர், 6ம்பிரதிவாதி அமுதவேணி ஆகியோர் சொத்தின் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். ராஜம்மாள் எழுதிக்கொடுத்த உயிலின் அடிப்படையில் 4ம் பிரதிவாதி ஜவகர், 6ம்பிரதிவாதி அமுதவேணி ஆகியோர் உரிமை மாற்றம் செய்து சுவாதீனத்தில் இருந்துவருவதால் வாதி லட்சுமி இந்த சொத்தில் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. வாதி லட்சுமி என்னுடைய சகோதரி என்பதால் வாதி லட்சுமிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.